முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

O.S. No. 69 / 2018

2019 ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் நாள் புதன்கிழமை கீழ்க்கண்ட சாட்சியின் வாக்குமூலம் (1965 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. சரவணக்குமார், Bench Clerk அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜமீல் உசேன் | தொழில் | : |
| த/பெ. \| க/பெ. | : முனீர் உசேன் | வட்டம் | : |
| வயது | : | கிராமம் | : |
| ஜாதி | : | மதம் | : |

வா.சா.3

முதல் விசாரணை

நீதிமன்றத்திலிருந்து வந்த சம்மன் அடிப்படையில் நான் ஆஜராகி சாட்சி சொல்கிறேன். புத்தூரிலுள்ள ராஜா என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ல் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். புத்தூர் ராஜா எனக்கு பழக்கமானவர். அவர் ஒரு பண பரிமாற்றத்திற்காக சாட்சியாக இருக்க அழைத்திருந்தார். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவதுதான். என் முன்னால் அருணகிரியும், ராஜாவும் வா.சா.ஆ.1 ல் கையொப்பம் போட்டார்கள், அதை நான் பார்த்தேன். இந்த ஆவணத்தில் மற்றொரு சாட்சியாக கையொப்பம் செய்தவர் பாடலீஸ்வரனையும் எனக்கு தெரியும். பாடலீஸ்வரன் வா.சா.ஆ.1 ல் சாட்சியாக கையொப்பம் செய்த பின்பு நான் கையொப்பம் செய்தேன். மேற்படி வா.சா.ஆ.1 ல் நான் கையொப்பம் செய்வதற்கு முன்பாக அருணகிரி, ராஜாவுக்கு ரூ.13 லட்சம் என் முன்னால் தான் கொடுத்தார்.

பிரதிவாதி தரப்பு கு.வி. :-

நான் ஆப்டிக்கல் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ராஜா (எ) பாடலீஸ்வரன் கடைக்கும், எனது கடைக்கும் இடையே சுமார் 10 கடைகள் உள்ளது. அருணகிரியை நான் கையொப்பம் செய்தபோதுதான் பார்த்தேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி சொல்ல சம்மன் வந்ததை பெற்ற பின்பு நான் வழக்கறிஞரை சென்று

பார்த்தேனா என்றால் இல்லை. ராஜா என்மீதும் என்னுடன் இன்னொரு சாட்சி கையொப்பம் செய்து பாடலீஸ்வரன் மற்றும் வாதி ஆகியோர்கள் நாங்கள் சேர்ந்து வா.சா.ஆ.1 ஐ தயார் செய்து கொண்டோம் என்று எங்கள் பிரதிவாதி ராஜா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் எனக்கு அதுபொறுத்து தெரியாது. இவ்வாறு நாங்கள் மோசடியாக ஆவணத்தை தயார் செய்தோம் என்று எங்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் அவ்வாறு ஏதும் இல்லை. மேலும் வா.சா.ஆ.1 ஐ நானும், பாடலீஸ்வரன் மற்றும் வாதியும் சேர்ந்து மோசடியாக தயார் செய்து வைத்துக் கொண்டோம் என்றும் அந்த ஆவணத்தை திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று பிரதிவாதி எங்கள் மீது அ.வ.எண்.90/2014 ல் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ல் ராஜா, பாடலீஸ்வரன் மற்றும் என் பெயர் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்மீதும், மற்ற இரு நபர்கள் மீதும் பிரதிவாதி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரிந்தும், நான் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வாறு ஆவணங்களை நாங்கள் மோசடியாக தயார் செய்ததாக எங்கள்மீது உறையூர் கா.நி.கு.எண்.11/2014 ல் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. பணத்தை எனது கடையில் கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் ராஜா (எ) பாடலீஸ்வரன், அருணகிரி, புத்தூர் ராஜா மற்றும் நான் ஆகியோர்கள் இருந்தோம். கிரய ஒப்பந்த ஆவணம் எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்பது சொல்ல முடியுமா என்றால் மதியம் 12.00 மணிக்கு எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ல் உள்ள வாசகங்களை நான் படித்து பார்க்கவில்லை, ஆனால் அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் சொல்லி தெரிந்து கொண்டேன். பொதுவாக ஆவணத்தை படித்து பார்க்காமல் கையொப்பம் செய்வேனா என்றால் அவ்வாறு போடுவதில்லை, பழக்க வழக்கத்தில் இந்த கையொப்பத்தை நான் செய்தேன். பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டதற்காகத்தான் நான் முன்னின்று பிரதிவாதிக்கு கடன் வாங்கிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஐ தயார் செய்யும் நான் உடன் இருக்கவில்லை. இந்த ஆவணமானது பிரதிவாதி, அம்மன் பைனான்சில் கடன் வாங்கியதற்காக செக்குரிட்டியாக கொடுக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் நான் கையொப்பம் செய்யும்போது அதில் எத்தனை முத்திரை தாள் இருந்தது என்றும், எத்தனை பச்சை பேப்பர் இருந்தது என்றால் ஒரு முத்திரை தாளும், ஒரு

பச்சை பேப்பரும் இருந்தது. வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டபோது மூல ஆவணங்கள் அங்கு இருந்ததா என்றால் இல்லை. நான் சாட்சி கையொப்பம் செய்யும்போது ஆவணம் பரிமாற்றம் நடந்ததா என்றால் அவ்வாறு இல்லை. ரூ.13 லட்சத்தை நான் எண்ணிப் பார்த்தேனா என்றால் நான் எண்ணிப் பார்க்கவில்லை. பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண் 90/2014 ல் நாங்கள் மூவரும்தான் பதில் உரை தாக்கல் செய்துள்ளோம் என்றும், அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கிரய ஒப்பந்த உடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரங்கள் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 பச்சை தாளில் என்ன விவரம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்பது நான் படித்து பார்க்கவில்லை. வா.சா.ஆ.1 ல் 2 வது தாளில் சாட்சிகள் என்று எழுதியது யார் என்றால் நான் இல்லை, ராஜா (எ) பாடலீஸ்வரன் எழுதினார். நாங்கள் மூவரும் சேர்ந்து ஏற்கனவே பிரதிவாதி, அம்மன் பைனான்சில் கொடுத்திருந்த வெற்று தாள்களை பெற்று, மோசடியாக வா.சா.ஆ.1 ஆன கிரய ஒப்பந்த உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.